

2021 ஆம் வருடத்துக்கான
செயலாற்று அறிக்கை

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்தொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்தொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு.

மாளிகாவத்த, கொழும்பு - 10

செலவுத் தலைப்பு இல. : 405

உள்ளடக்கம்		பக்க இல.
01.	**நிறுவனத்தின் சுயவிபரம்**	
1.1.	அறிமுகம்	03
1.2.	நிறுவனத்தின் கண்ணோட்டம், நடவடிக்கை, நோக்கம்	04
1.3.	பிரதான செயற்பாடுகள்	05
1.4.	நிறுவன கட்டமைப்பு	06
1.5.	அமைச்சின் கீழுள்ள திணைக்களம்/ நிறுவனம்	07
1.6.	இராஜாங்க அமைச்சின் கீழுள்ள நிறுவன நிதியம்	08
1.7.	வெளிநாட்டு உதவி பெறும் செயற்றிட்டங்களின் தகவல்கள்	09
02.	**முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்**	
2.1	முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்	10 - 13
03.	**2021 திசம்பர் 31இன் இறுதி வருடத்துக்கான அனைத்து நிதி பற்றிய செயலாற்றுகை**	
3.1.	நிதி செயலாற்று கூற்று	14 - 15
3.2.	நிதி நிலை பற்றிய கூற்று	16
3.3.	நிதி பாய்ச்சல் பற்றிய கூற்று	17 - 18
3.4.	நிதிக் கூற்று குறிப்பு	19
3.5.	வருமான சேகரிப்புக்கான செயலாற்றுகை	20
3.6.	ஒதுக்கிடப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மேற்கொண்ட செயலாற்றுகை	20
3.7.	நி.பி. 208 கூற்று, பிற அமைச்சு/ திணைக்களங்களின் முகவராக இந்த திணைக்களத்துக்கு/ மாவட்ட செயலகத்துக்கு/ மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்	20
3.8.	நிதி அல்லாத சொத்து அறிக்கை செயலாற்றுகை	21
3.9.	கணக்காய்வாளரின் அறிக்கை	22
04.	**செயலாற்றுகையின் குறிகாட்டி**	
4.1.	நிறுவனங்களின் செயலாற்றுகையின் குறிகாட்டி (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)	23
05.	**உறுதியான அபிவிருத்தியின் நோக்கம் (SDG) நிறைவேற்றிய செயலாற்றுகை**	
5.1.	அடையாளம் காணப்பட்ட உறுதியான அபிவிருத்தியின் நோக்கம்	24
5.2.	நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கை நிறைவேற்றிய சாதனை மற்றும் சவால்களின் சுருக்கம்	24 - 28
06.	**மனித வள சுயவிபரம்**	
6.1.	ஊழியர் புள்ளிவிபர முகாமைத்துவம்	29
6.2.	நிறுவனத்தின் செயற்றினுக்கான மனித வளக் குறைவு அல்லது மேலதிக பாதிப்புக்கான விடயம்	29
6.3	மனித வள அபிவிருத்தி	29
07.	**இணக்க அறிக்கை**	30 - 37

நிறுவனத்தின் சுயவிபரம்/ செயற்படுத்தலின் சுருக்கம்

1.1 அறிமுகம்

முக்கியமாக இலங்கையின் மீன் வளங்களில் 517,00 சதுர கிலோ மீற்றராகும். சமுத்திர வளங்கள் மற்றும் அபிவிருத்தி செய்யக்கூடிய கடனீரேரி, ஆற்றுவாய், வாவிகள் 489,000 ஹெக்டயர் நீர்நிலைத் தொகுதியில் அடங்கும். இவ்வாறு பண்டைய காலம் தொட்டு கடற்றொழில் பிரிவில் வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் மீனவ மக்கள் இம்பீன்பிடிக் கைத்தொழிலில் நேரடியாக ஈடுபட்டு வரும் பிரிவாக உள்ளது. இந்த மனித வளம் மற்றும் ஊழியர்களினால் இலங்கையில் கடற்றொழில் கைத்தொழிலை உயர்நிலைக்கு கொண்டு வருவதற்கு அரசினால் பாரிய தொகை செலவிட்டு அடிப்படை வசதிகளை நிர்மாணிப்பதற்கான முக்கியத்துவத்தில் கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கையில் கடற்றொழில் பிரிவு மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அமைச்சானது அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு. தன்னிறவு பெற்ற கடற்றொழில் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப அலங்கார மீன், நன்னீர் மீன், இறால் செய்கையை மேம்படுத்தல் பல்தின கடற்றொழில் மற்றும் மீன் ஏற்றுமதி விடயம் சம்பந்தமான கொள்கை தயாரிப்பதற்கு உதவுதல், தேசிய வரவு செலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் உள்ள செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சு நேரடியாக தொடர்புபடுகிறது.

கடற்றொழில் கைத்தொழில் புதிதாக செயற்படுத்தப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் வேலைத் திட்டங்களினால் பாரிய முன்னேற்றத்தை எட்டியுள்ளதுடன் இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதன் தேசிய கொள்கையின் நோக்கங்களை அடைய முடியுமென கணிப்பிடப்பட்டுள்ளது.

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் விடயத் தலைப்பின் கீழ் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை, தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், ம/ப. சீ-நோர் நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் செயற்பட்டு வருவதுடன், இந்த நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் எதிர்பார்க்கப்பட்ட உயர் அபிவிருத்தி மட்டத்தை அடைவதற்கு பங்களிக்கும் பலம் மற்றும் இடைவெளிகளை அடையாளம் கண்டு அதற்கான திட்டங்கள் மற்றும் உத்திகளும் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய அமைச்சினால் குறிப்பிட்ட விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கி 2020 – 2025 இடைக்கால திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கு மேற்குறித்த நிறுவனங்கள் ஒன்றிணைந்து மனித மற்றும் பௌதீக வளங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் கண்ணோட்டம், நடவடிக்கை, நோக்கம்

கண்ணோட்டம்

இயற்கையான கடற்றொழில் பொருளாதாரத்தை ஏற்படுத்தல்.

நடவடிக்கை

நவீன மற்றும் உறுதியான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதன் ஊடாக உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தையில் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை துறையில் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை விரிவுபடுத்தல்.

நோக்கம்

1. தேசிய மீன் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பொதுமக்களின் போசனை நிலை மற்றும் உணவு பாதுகாப்பை மேம்படுத்தல்.

2. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை முகாமைப்படுத்தல்.

3. பின்அறுவடையின்போது ஏற்படும் வீண்விரயத்தைக் குறைத்தல் மற்றும் வழங்களின் குணப்பண்புகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்திற்கு உயர்த்துதல்.

4. கடற்றொழில் கைத்தொழில் மற்றும் அது சார்ந்த கைத்தொழிலின் மூலம் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தல்

5. மீன் உற்பத்தி ஏற்றுமதியிலிருந்து அந்நிய செலவாணியை ஈட்டல்.

விசேட முன்னுரிமைகள்

இந்த இராஜாங்க அமைச்சின் முக்கியத்துவமான முன்னுரிமைகள் பின்வருமாறு :

1. ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு அலங்கார மீன் கைத்தொழிலை நிறுவுவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்.

2. வாவிகளில் மேற்கொள்வதற்குத் தேவையான மீன் வளர்ப்பை மேம்படுத்துவதற்கு நன்னீர் மீன் கடனீரேரி மற்றும் மேட்டு நிலங்கள் சார்ந்து தேவையான வழிமுறைகளை உருவாக்கல்.

3. பெரிய அளவிலான படகுகளின் செயற்பாடுகளை வினைத் திறனாக மேற்கொள்வதற்கு கடற்றொழில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.

4. பன்னாட் படகுகளுக்கு கடல் நீரைப் பயன்படுத்தி குளிரூட்டல் தொகுதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் சூரிய சக்தி பயன்பாட்டை ஊக்குவித்தல்.

5. நவீன தொலைத் தொடர்பு வசதிகள், எரிபொருள், குளிரூட்டல் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளுடனான சகல துறைமுகங்களினதும், நங்கூரமிடும் தளங்களையும் மேம்படுத்தல்.

6. கடல் மற்றும் நன்னீர் மீன்களை தொடர்ந்து இனப் பெருக்கத்துக்கு மீனவ சமூக சங்கங்கள் மற்றும் தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

7. சூழலுக்கு இணக்கமான நவீன அதிதொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி மீன் அறுவடையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். --


8. மீனவர்களின் மற்றும் அத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழில்துறை பயிற்சி மற்றும் அறிவை மேம்படுத்தல்

1.3. பிரதான செயற்பாடுகள்

அலங்கார மீன் நன்னீர் மீன் மற்றும் இறால் செய்கை, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல்தின கடற்றொழில் நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு	
பிரதான பொறுப்புக்கான துறைகள்	தேசிய ரீதியாக மீன் நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்தல், தேசிய மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு வலுவான பிரசைகளை உருவாக்கி மீனவ மக்களின் சமூகப் பொருளாதார, வாழ்வார மட்டத்தை மேம்படுத்தி தேசிய பொருளாதாரத்துக்கு உயர் பங்களிப்பை வழங்கும் தொழிலாக மாற்றுதல்.
அலங்கார மீன், நன்னீர் மீன் மற்றும் இறால் செய்கையிடல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல்தின கடற்றொழில் நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் செயற்பாடுகளும் பொறுப்புகளும்.	கடற்றொழில் அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் பேரில் "**தன்னிறைவான கடற்றொழில் பொருளாதாரம்**" ஒன்றை ஏற்படுத்துவதற்கான சட்டம் மற்றும் பிரமானங்களுக்கு அமைவாக அலங்கார மீன், நன்னீர் மீன் மற்றும் இறால் செய்கையிடல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல்தின கடற்றொழில் நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதி தலைப்புக்குரிய கொள்கையைத் தயாரிப்பதற்கு உதவி வழங்கல், தேசிய வரவு செலவு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழுள்ள செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்குரிய திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் சட்ட ரீதியான நிறுவனங்களின் விடயத் தலைப்பு மற்றும் செயற்பாடுகள் மற்றும் அது சார்பான கொள்கை, வேலைத் திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், நிறைவு செய்தல் மற்றும் மதிப்பிடல்.
அலங்கார மீன், நன்னீர் மீன் மற்றும் இறால் செய்கையிடல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல்தின கடற்றொழில் நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சுக்குரிய சிறப்பான முன்னுரிமைகள்	1. ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு அலங்கார மீன் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்கல். 2. ஏரிகள், தடாகங்கள் மற்றும் நிலப் பரப்பு நிலங்கள் சார்ந்து நன்னீர் மீன் செய்கையை பிரபல்யப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளைத் தயாரித்தல். 3. பெரிய அளவிலான கடற்றொழில் படகுகளின் செயற்பாட்டு செயற்றிறனான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு கடற்றொழில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல். 4. பல்தின கடற்றொழில் படகுகளுக்கு கடல் நீரைப் பயன்படுத்தி குளிரூட்டல் தொகுதி அபிவிருத்தி செய்தல், சூரிய சக்தியைப் பயன்படுத்த ஊக்குவித்தல். 5. நவீன தொலைத் தொடர்பு வசதிகள், குளிரூட்டி, எரிபொருள் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளுடன் சகல கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரமிடும் தளங்களை விரிவுபடுத்தல். 6. கடல் மற்றும் நன்னீர் செய்கையை முறையான இனப் பெருக்கத்துக்கு கடற்றொழில் சமூக நடமாடும் மற்றும் தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து வேலைத் திட்டங்களை ஆரம்பித்தல். 7. சூழலுக்கு இணக்கமான நவீன அதிதொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி மீன் அறுவடையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். 8. மீனவர்களின் மற்றும் அத்தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் ரீதியான பயிற்சி மற்றும் அறிவை மேம்படுத்தல்.

1.4. நிறுவனத்தின் கட்டமைப்பு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு



1.5 அமைச்சின் கீழ் செயற்படும் திணைக்களம்/ நிறுவனங்கள்

தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை (NARA)	**எதிர்பார்க்கும் நோக்கம்** - நீரியல் வளங்கள் சம்பந்தமான ஆய்வு மேற்கொள்ளல் மற்றும் வளங்கள் அபிவிருத்தி,பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம். **பொறுப்புகள்** -1981ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் சமுத்திர உயிரின வளங்கள், நன்னீர் நீரியல் வளங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை, கடற்றொழில் தொழில்நுட்பம், பின் அறுவடையின் வீண் விரய தொழில் நுட்பம், சுற்றாடல் ஆய்வு, சமுத்திர உயிரின விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானம் சம்பந்தமான பரிசேதனைகளை மேற்கொள்ளல்.
தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை (NAQDA)	**எதிர்பார்க்கும் நோக்கம்** - செய்கை அடிப்படையில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு. **பொறுப்புகள்** - 1998இன் 53ஆம் இலக்க இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கைக்குத் தேவையான குடம்பிகள் வழங்கல், இறால் செய்கை நடவடிக்கையை கண்காணிப்பதற்கு நிலையங்கள் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை பயிற்சிகளை வழங்கல். மற்றும் அபிவிருத்தி செய்தல்.
இலங்கை கடற்றொழில் துறைமுகங் கூட்டுத்தாபனம் (CFHC)	**எதிர்பார்க்கும் நோக்கம்** - மீன் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர்களுக்கு உச்ச ரீதியாக அனுகூலத்தை வழங்குவதன் மூலம் மீன் விற்பனை சந்தைக்குப் பங்களித்தல். பொறுப்புகள் -1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச வர்த்தக கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் மீன் கொள்முதல் மற்றும் விற்பனை, ஐஸ் உற்பத்தி, விற்பனை, குளிரூட்டல் வசதிகளை மேற்கொண்டு வருகிறது.
இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் (CFC)	**எதிர்பார்க்கும் நோக்கம்** - மீன் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர்களுக்கு உச்ச ரீதியாக அனுகூலத்தை வழங்குவதன் மூலம் மீன் விற்பனை சந்தைக்குப் பங்களித்தல். பொறுப்புகள் -1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச வர்த்தக கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் மீன் கொள்முதல் மற்றும் விற்பனை, ஐஸ் உற்பத்தி, விற்பனை, குளிரூட்டல் வசதிகளை மேற்கொண்டு வருகிறது.
சீ-நோர் நிறுவனம் (Cey-nor)	**எதிர்பார்க்கும் நோக்கம்** - கடற்றொழில் மற்றும் அது சார்ந்த தொழிலுக்கான சகல உபகரணங்கள் வழங்கல். **பொறுப்புகள்** - 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் மூலம் பயிபர் க்ளாஸ் படகுகள் உற்பத்தி மற்றும் விற்பனை மீன்பிடி வலைகள் உற்பத்தி மற்றும் விற்பனை அத்துடன் மீன்பிடி உபகரணங்களையும் வழங்கி வருகிறது

1.6 இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவன நிதியம்

நிறுவனம்	வேலைத்திட்டம்	முதலீட்டு வரவு செலவு ஒதுக்கீடு ரூபா. மில்.
செயற்பாட்டு நடவடிக்கை		
	405-01-01 இராஜாங்க அமைச்சின் அலுவலகம்	8.25
	405-01-02 நிறுவன மற்றும் நிர்வாக சேவை.	4.00
		12.25
அலங்கார மீன், நன்னீர் மீன் மற்றும் இறால் செய்கை, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல்தின கடற்றொழில் நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு	405-2-03-052-2506 மீன்களின் இனப் பெருக்கத் திறனை மேம்படுத்தல்.	550.00
	405-2-03-061-2506 நீர்வாழ் உயிரினச் செய்கை நிலையத்தை பராமரித்தல், புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல். (NAQDA)	372.00
	405-2-03-068-2506 மைலிட்டி துறைமுகத்தை கடற்றொழில் துறைமுகமாக அபிவிருத்தி செய்தல், குளிரூட்டல் வசதி மற்றும் களஞ்சிய வசதியை நிறுவுதல்.	67.00
	405-2-03-069-2506 அலங்கார மீன் உற்பத்தி (NAQDA)	250.50
	405-2-03-070-2506 அஹம்பாந்தோட்டை கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி	20.00
	405-2-03-071-2506 சுதுவெல்ல கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி	73.00
	405-2-03-072-2506 தெவிந்துவ கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி	100.00
	405-2-03-073-2506 படகுத்துறை அபிவிருத்தி செய்தல்.	18.00
	405-2-03-074-2506 மீன இனப் பெருக்கத்தை மேம்படுத்தல் மற்றும் புதிய நிர்மாணங்கள் (NAQDA)	300.00
	405-2-03-075-2506 மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், புத்தளம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் கடற்றொழில் பண்ணை பிராந்திய அபிவிருத்தி.	200.00
	405-2-03-077-2506 இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை முழுமையாக புனரமைத்தல்.	40.35
		1,990.85
தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)	மூலதன அபிவிருத்தி (NAQDA)	75.00
தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை (NARA)	405-2-04-002-2201 மூலதன அபிவிருத்தி (NARA)	195.00
	405-2-04-002-2507 மூலதன அபிவிருத்தி (NARA)	190.00
இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனம் (CFHC)	மூலதன அபிவிருத்தி (CFHC)	250.00
		710.00
		2,713.10

1.7 வெளிநாட்டு உதவி பெறும் செயற்றிட்டங்களின் தகவல்கள் 2021

இல	செயற்றிட்டத்தின் பெயர்	நிதி வழங்கும் நிறுவனம்	செயற்றிட்ட மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா மில்.	செயற் றிட்ட காலம்
1	கடற்றொழில் கைத்தொழிலில் அறுவடையின் பின்னரான பாதிப்பைக் குறைப்பதன் ஊடாக சமுத்திர பாதுகாப்பை உறுதிப்படுத்தல் : TCP/SRL/3803/C1	ஐக்கிய தேசியத்தின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)	4.4	02 வருடங்கள்
2	இலங்கை – நோர்வே இரு தரப்பு செயற்றிட்டம் - இலங்கையில் மீன் வளங்களின் முகாமைத்துவத்தை மேம்படுத்தவதற்கு தொழில்நுட்ப உதவி 2ஆம் கட்டம்	நோர்வே உயர்தானிகர் அலுவலகம்	208.3	02 வருடங்கள்
3	இலங்கை நீரநிலைகளில் வரல் மீன் மற்றும் நன்னீர் இறால் பயன்படுத்தி செய்கை அடிப்படையிலான கடற்றொழில் கைத்தொழிலில் முறையான, செயற்றிறனான மற்றும் நிலைபேறாக மேம்படுத்தல்	சர்வதேச விவசாய ஆய்வுக்கான அவுஸ்திரேலியா நிலையம்	248.12	04 வருடங்கள்

02 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2021ஆம் ஆண்டுக்கு அரசின் மூலம் அலங்கார மீன், நன்னீர் மீன் மற்றும் இறால் செய்கையிடல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல்தின கடற்றொழில் நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட முதலீட்டு வரவு செலவு நிதியின் அளவு ரூபா 2,713.10 மில்லியனாக இருப்பதுடன் இதில் ரூபா 1,796.05 மில்லியன் 2021ஆம் ஆண்டுக்குள் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு 2020ஆம் ஆண்டில் மொத்த மீன் உற்பத்தி 428.740 மெ. தொன்னுடன் ஒப்பிடும்போது 2021ஆம் ஆண்டு ஜனவரி – திசம்பர் வரையிலான காலப் பகுதியில் மீன் உற்பத்தி 435,910 மெற்றிக் தொன் அதிகரித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. 2020 ஆம் ஆண்டில் மொத்த மீன் உற்பத்திக்கு உவர்நீர் மீன்பிடிக் கைத்தொழிலின் பங்களிப்பாக 326,930 மெ. தொன் மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் 101,810 மெ. தொன்னாக இருந்ததுடன் 2021ஆம் ஆண்டில் உவர் நீர் மற்றும் நன்னீர் கைத்தொழிலில் முறையே 331,675 மெ.தொ. மற்றும் 104,235 மெற்றிக் தொன்களாக மீன் உற்பத்திக்குப் பங்களிப்பு வழங்கியுள்ளது.

பொதுமக்களின் போசனை மட்டம் மற்றும் சிறந்த சுகாதார நிலையை மேம்படுத்துவதற்கு புரோட்டின் மூலாதாரமாகக் கொண்ட மீன் நுகர்வு மிக முக்கியமானதாகும். 2021 ஆம் ஆண்டு ஜனவரி முதல் திசம்பர் வரையான காலப் பகுதியில் தனிநபர் மீன் நுகர்வு நாளொன்றுக்கு 37.1 கிராமாக இருப்பினும் எதிர்வரும் காலங்களில் இதனை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய வருமானத்துக்கு கடற்றொழில் துறையின் பங்களிப்பை மேலும் அதிகரிப்பதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு ஜனவரி முதல் திசம்பர் வரையான காலப் பகுதியில் மொத்த மீன் உற்பத்தியில் ஏற்றுமதி 26,749 மெ. தொன்னாகும். ஏற்றுமதி பெறுமானம் ரூபா 63,222 மில்லியன் (318 மில். அ. டொ.) என அறிக்கைப்படுத்தப் பட்டுள்ளது. இது தற்போது அதிக மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் வருமான இருப்பதுடன், இதனை 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 58.6%ஆல் அதிகரித்து உள்ளதைக் காட்டுகின்து. சம்பந்தப்பட்ட காலப் பகுதிக்குள் மீன் ஏற்றுமதி 56,176 மெ.தொ. ஆக இருந்ததுடன் இதன் பெறுமதி ரூபா 25,080 மில்லியனாகும். (126.17மில். அ. டொ.) மொத்த விற்பனை மீதி ரூபா 38,142 மில்லியனாகும். (191.87மில். அ. டொ.) 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது மீன் உற்பத்தி இறக்குமதி வீதம் 29.4% ஆல் குறைந்து காணப்பட்டது. ரின் மீன் இறக்குமதி 64.2%ஆலும் குளிரூட்டப்பட்ட மீன் இறக்குமதி 54.1% ஆல் குறைந்துள்ளமை ஓர் குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேலும் அலங்கார மீன் ஏற்றுமதி அக்காலப் பகுதியில் ரூபா 4,193 மில்லியன் (21.09மில். அ. டொ.) வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது. அப்பெறுமதி 2020ஆம் ஆண்டில் அலங்கார மீன் ஏற்றுமதி பெறுமானத்தை விட 74% அதிகமாகும். இறால் வளர்ப்பின் தீவிரம் மற்றும் நவீனமாக்கலின் விளைவாக 2020 உடன் ஒப்பிடும்போது 2021இல் இறால் ஏற்றுமதி 166.5%ஆல் அதிகரித்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் "**சுபீட்சத்தின் நோக்கு**" எனும் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பிரிவின் மூலம் வளமான தேசத்தைக் கட்டியெழுப்பும் தற்போதைய அரசின் வேலைத் திட்டத்துக்கு அமைய குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இலக்காகக் கொண்டு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு "**கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினச் செய்கை வாழ்வாதார**" செயற்றிட்டமான அபிவிருத்தி வேலைத் திட்டம் செயற்படுத்தப் பட்டுள்ளது. இதற்கு நேரடியான நிதியாக சமுர்த்தி, வீட்டு பொருளாதாரம், நுண் நிதி, சுயதொழில் மற்றும் வர்த்தக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் ஊடாக பெறப்பட்டுள்ளது. இவ் வேலைத் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக 2,277 பயனாளிகளுக்கு

ரூபா 168.8 மில்லியனும் இரண்டாம் கட்டமாக 1,707 பயனாளிகளுக்கு ரூபா 97.2 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி கடற்றொழில் துறைக்குப் பொருத்தமான பல செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டங்கள் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கொள்கைப் பிரகடனமான **"சுபீட்சத்தின் நோக்கு"** அலங்கார மீன், நன்னீர் மீன் மற்றும் இறால் செய்கையிடல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல்தின கடற்றொழில் நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சுக்கு ஒதுக்கிடப்பட்ட குறிப்பிட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டுள்ளது. கடற்றொழில் துறைமுக அபிவிருத்தி நங்கூரமிடும்தளம் மற்றும் படகுத்துறைகளை அபிவிருத்தி செய்தல், உள்ளக மீன்பிடிக் கைத்தொழில் அபிவிருத்திக்கு தேவையான மீன் குஞ்சுகள் வைப்பிடுதல், மீன் குஞ்சுகள் உற்பத்திக்கு சமூக குழுக்கள், மீனவ சங்கங்கள் மற்றும் தனியார் தரப்பினரின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு பல வேலைத் திட்டங்ள் உருவாக்கப்பட்டுள்ளன. நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை, மீன் இனப் பெருக்கம் மற்றும் மீன் குஞ்சுகளின் உற்பத்தித் திறணை மேம்படுத்தல், புதிய இன மீன்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாக ஏற்றுமதி செய்யப்படும் மீன் வரம்பினை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கை இராஜாங்க அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டளவில் 110.85 மில்லியன் மீன் குஞ்சுகளும் 52.16 மில்லியன் இறால் குஞ்சுகளும் நீர்நிலைகளில் வைப்பிடப்பட்டுள்ளது. மீன் குஞ்சுகளின் உற்பத்திக்கு சமூக அடிப்படையிலான இனப் பெருக்க அலகு, மீனவ சங்கங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கூடுகளில் மீன் வளர்ப்பு நடவடிக்கைகக்கு தனியார் பிரிவினர் மூலம் வழங்கிய பங்களிப்பு விசேட அம்சமாகும். கடலட்டை செய்கையை பிரபல்யப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வட மாகாணத்தில் சமூக பங்களிப்புடன் 02 கடலட்டை கிராமங்கள் நிறுவப்பட்டுள்ளது. இறால் செய்கைத் திட்டம் மற்றும் தீவிர திட்டத்துக்கு விவசாய நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் ஊடாக இந்த வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் தனது ஆய்வுகளுக்கு அமைய மீன் அறுவடையின் பின்னரான பாதிப்பு 40% - 60% மாக சுட்டிக் காட்டப்பட்டு இந்த நிலையைக் குறைப்பதற்கு உசிதமான வழிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மீனவர்களை அறிவூட்டும் வேலைத்திட்டம், நவீன வசதிகளைக் கொண்ட படகுகின் உற்பத்தியை நவீனமயப்படுத்தல், தரமான ஐஸ் மற்றும் நீர் பயன்பாடு, முறையாக மீன்களை அறுவடை செய்தல் மற்றும் கரைசேர்த்தல், குளிரூட்டல் தொகுதி மற்றும் நீர் வசதிகளுடனான துறைமுகங்களைப் பராமரித்தல் போன்ற பல நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. புதிய கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரமிடும்தளம் நிர்மாணம் மற்றும் தற்போதுள்ள இடங்களை புதிய தொழில் நுட்பத்துடன் மறுசீரமைக்கும் நடவடிக்கையின்போது இது சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மீனவர்களுக்குத் தேவையான குளிரூட்டி வசதிகள், தேவையான பனிக்கட்டி வழங்கல் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்கு தனியார் தரப்பினருடன் தொடர்புபடுத்தும் வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. உள்நாட்டு ரின்மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்கி வருவதுடன், இதுகால வரை 08 ரின்மீன் தொழிற்சாலைகள் நிர்மாணித்து செயற்பட்டு வருகின்றன.

இலங்கை கடற்றொழில் துறைமுகங்களின் விற்பனை தொகுதிகளை மேம்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் மெகா விற்பனை நிலையம் அடங்கலாக 11 புதிய விற்பனை நிலையங்கள் இந்த ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது.

அலங்கார மீன், நன்னீர் மீன், இறால் செய்கையிடல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல்தின கடற்றொழில் நடவடிக்கை மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் ஊடாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் **"சுபீட்சத்தின் நோக்கு"** எனும் கொள்கையின் பிரகாரம் இராஜாங்க அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட முன்னுரிமையின் அடிப்படையில் 2020 – 2025 ஐந்து வருட திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

- கரையோர மீன் குடித்தொகையின் ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு அமைவாக மேற்குக் கடற் பரப்பில் சிறிய மீன் இனங்களின் குடித்தொகையை முகாமைத்துவம் செய்வதற்கு, தென் கடலில் சிங்கி இறால் குடித் தொகையை முகாமைத்துவம் செய்வதற்கும் திட்டங்கள் முறையாக மேற்கொண்டு மீனவ மக்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- தேவையைப் பூர்த்தி செய்வதற்கு புதிய கடற்றொழில் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன், தற்போதுள்ள துறைமுகங்களிலுள்ள வசதிகள் விரிவுபடுத்தப்படுகின்றன. அத்துடன் மீனவ சமூகத்தினருக்குத் தேவையான பனிக்கட்டி குளிரூட்டல் வசதிகள் போன்றவைகள் தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் வழங்குவதற்கான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- பல்தின கடற்றொழில் படகுகளினால் மேற்கொள்ளப்படும் அறுவடைக்குப் பின்னரான பாதிப்பை குறைக்கும் நோக்கில் பல்தின கடற்றொழில் படகுகளுக்கு மிகவும் வினைத் திறனான குளிரூட்டல் தொகுதி அறிமுகப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தனியார் தரப்பினர் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட படகு வினைத் திறன் கொண்ட குளிரூட்டல் தொகுதிகளுடன் அமைந்துள்ளதை உறுதி செய்வதற்குத் தேவையான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படும்.

- அனைத்து பல்தின கடற்றொழில் படகுகளுக்கும் VMS தொகுதி பொறுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் ஊடாக சட்ட விரோதமான, முறையற்ற மற்றும் அறிக்கையிடப்படாத (IUU) கடற்றொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

- மீன் அறுவடையின் பெறுமதி சங்கிலி (Value Chain) ஊடாக ஏற்படும் அறுவடைக்குப் பின்னரான பாதிப்பைக் குறைப்பதற்கு பல்வேறு வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

- கிராம பிரதேச மக்களுக்கு சாதாரண விலைக்கு தரமான மீன்கள் வழங்கல், வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் நீர்த் தேங்கங்களில் மீன் குஞ்சுகள் வைப்பிடும் வேலைத் திட்டத்தின் கீழ் மிகப் பரவலாக நடைமுறைப்படுத்ப்படுகின்றன. அதே நேரத்தில் நீர்நிலைகளில் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதன் ஊடாக நிலைபேறாக உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- மிகப் பெறுமதியான ஏற்றுமதி கோரிக்கையுடனான இறால், கடலட்டை, நீர்த் தாவரங்கள், கடல் வரல் மீன் ஆகிய நீர்வாழ் உயிரினங்கள் தனியார் முதலீட்டின் மூலம் ஊக்குவிக்கப்பட்டு வாழ்வாதார அபிவிருத்தி நோக்குடன் செயற்படுத்தப்படுகின்றது.

- மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் மற்றும் மீன் உற்பத்தி இறக்குமதியை குறைக்கும் நோக்குடன் நீர்வாழ் உயிரினச் செய்கை மேம்படுத்தல், அறுவடையின் பின்னரான பாதிப்பைக் குறைத்தல், தேசிய ரீதியாக தரமான ரின் மீன், கருவாடு மற்றும் மாசி உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு தனியார் தரப்பினர்களை ஊக்குவிக்கும் பல வேலைத் திட்டங்களை செயற்படுத்தல்.

- முக்கியமாக நன்னீர் நீர்த் தேக்கங்களில் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்குத் தேவையான மீன் குஞ்சுகள் உற்பத்தி சமூகக் குழுக்களின் பங்கேற்புடன் மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

- அலங்கார மீன் கைத்தொழிலில் இவ்வாறு ஏனைய நீர்வாழ் உயிரினச் செய்கை துறையில் ஈடுபடும் குழுவினர்களுக்கு NVQ தகைமை வழங்கும் வேலைத் திட்டம் மிக விரிவாக செயற்படுத்தப்படும்.

- உற்பத்திக்கு மற்றும் நுகர்வுக்கும் நியாயமான் முறையில் முன்னெடுத்துச் செல்லும் விடயத்துக்கு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் விற்பனை வலையமைப்பு மேலும் விரிவுபடுத்தப்படும்.

- மேலும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசின் கொள்கை பிரகடனத்தின் ஊடாக மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி திறணை அதிகரிக்கச் செய்தல் மற்றும் கடற்றொழில் துறையை மேம்படுத்தல் ஆகியவற்றின் முறையான வேலைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் சமுத்திரம் சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்க வேண்டிய அவசியம் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஓட்டு மொத்தமாக 2021ஆம் ஆண்டு அனைத்து சவால்களையும் கடந்து எதிர்பார்த்த இலக்கை வெற்றி கொள்வதன் ஊடாக திருப்திகரமான முடிவுகள் மற்றும் வெற்றியை அடைந்து கொள்ள முடியுமெனவும், ஐக்கிய நாடுகளின் நிலைபேறான இலக்கை அடைந்து கொள்வதற்கும், எதிர்வரும் காலங்களில் மக்களின் அபிலாசைகளை அடைவதற்கும் தேவையான திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்கள் தொடர்பில் அரசினால் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொவிட் தொற்றுக்கு முகங்கொடுத்து எதிர்பார்க்கப்படும் சாதகமான முடிவுகளை அடைவது கடினம் என்றாலும், அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் **"சுபீட்சத்தின் நோக்கு"** எனும் அடிப்படையிலும் அரச கொள்கை, கடற்றொழில் துறை தொடர்பான கொள்கையை அமுல்படுத்துவது அனைத்து சவால்களையும் கடந்து கடற்றொழில் கைத்தொழிலின் வளர்ச்சியை வலுப்படுத்துவதன் ஊடாக எதிர்வரும் காலங்களில் எதிர்பார்த்த அபிலாசைகளை அடைவதற்குப் பெரும் உதவியாக இருக்கும்.

03. 2021 திசம்பர் 31இன் இறுதி வருடத்துக்கான அனைத்து நிதி பற்றிய செயலாற்றுகை

3.1. நிதி செயலாற்று கூற்று

ஏசீஏ- எவ்.

2021 திசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

வரவு செலவு (2021)		குறிப்பு	உண்மை நிலை 2021	2020	
	வருமானப் பெறுகைகள				
-			-	-	
	வருமான வரி	1			
-			-	-	
	உள்ளூர் பொருட்கள் மற்றும்	2			
-	சேவைகள் மீதான வரி		-	-	ஏசீஏ -1
	சர்வதேச வர்த்தகம் மீதான	3			
-	வரிகள்		-	-	
	வரியில்லாத வருமானங்களும்	4			
-	ஏனையவையும்		-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
	வருமானமற்ற பெறுகைகள்				
-			-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,813,865,000	1,057,813,197	ஏசீஏ -3
-	வைப்புகள்		34,815,065	218,354,708	ஏசீஏ -4
-	முற்பணக் கணக்குகள்		529,469	88,136	ஏசீஏ - 5.1.5அ
	ஏனைய பெறுகைகள்		-	414,500	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		1,849,209,534	1,276,670,541	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ) + (ஆ)**		**1,849,209,534**	1,276,670,541	
	திரைசேரிக்கு பணம் அனுப்புதல் (ஈ)		550	-	
	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ) + (ஆ)		1,849,208,984	1,276,670,541	
	கழி : செலவினம்				
	மீண்டுவரும் செலவினம்				
-			-	-	
53,100,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	35,430,431	11,871,827	

35,600,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	6	34,074,396	8,911,575	ஏசீஏ - 2(ii)
1,363,900,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	1,395,250,466	1,273,905,000	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
1,452,600,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)**		**1,464,755,293**	**1,294,688,402**	
	மூலதனம் செலவினம்				
7,100,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	3,811,049	1,194,394	
3,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	2,321,463	453,424	
400,000,000	மூலதன மாற்றல்கள்	12	310,280,000	519,973,000	ஏசீஏ - 2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
400,000	மனித வள அபிவிருத்தி	14	5,000	-	
2,060,500,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	1,479,816,882	1,976,371,800	
2,471,000,000	**மொத்த மூலதன் செலவினம் (உ)**		**1,796,234,394**	2,497,992,618	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)				
	வைப்புக் கொடுப்பனவுகள்		122,636,086	20,717,174	ஏசீஏ -4
	முற்பணக் கொடுப்பனவுகள் ஏனைய பிரதான பேரேட்டு கணக்கு கொடுப்பனவு		2,153,939	1,458,526	ஏசீஏ - 5.5அ
	பிரதான பேரேட்டு கணக்கு செலவினம் (ஊ)		124,790,025	22,175,700	
	மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)		3,385,779,712	3,814,856,720	
-	**2021 திசம்பர் 31ல் உள்ளவாறான பணி முற்பண மீதி ஏ = (இ-எ)**		(1,536,570,728)	(2,538,186,179)	
	ஒப்பீட்டு அறிக்கைக்கு அமைய மீதி		(1,536,570,728)	(2,538,186,179)	ஏசீஏ -7
	2021 திசம்பர் 31ல் மொத்த மீதி		-	-	ஏசீஏ -3
			(1,536,570,728)	(2,538,186,179)	

3.2 நிதி நிலை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	2,774,886.00	183,923.00
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	2,994,860.00	1,370,390.00
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3		-
மொத்த சொத்துக்கள்		5,769,746.00	**1,554,313.00**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(106,822,203.00)	(196,287,600.00)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		2,774,886.00	183,923.00
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	109,816,513.00	197,637,533.00
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	550.00	20,457.00
மொத்தப் பொறுப்புக்கள்		5,769,746.00	**1,554,313.00**

பக்க இலக்கம் 01 முதல் 54 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 55 முதல் 62 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத்

கையொப்பமிடப்பட்டுள்ளது. கையொப்பமிடப்பட்டுள்ளது. கையொப்பமிடப்பட்டுள்ளது.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2022/02/24

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 2022/02/24

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 2022/02/24

Jayantha Chandrasoma
Secretary
State Ministry of Ornamental Fish, Aquarium Fish,
Prawn Farming, Fishery Harbour Development,
Multiday Fishing Activities and Fish Exports
New Secretariat, Maligawatte,
Colombo 10.

கே.டி.என். மனோஹரி
பிரதான கணக்காளர்
சிலிதுரு மஹுன், மிரிடிய மத்ஸ்ய හා ඉස්සන් ඇති කිරීම්,
දිවර වරාය සංවර්ධන, බහුදින දිවර කටයුතු හා
මත්ස්ය අපනයන රාජ්ය අමාත්යාංශය
නව මහ ලේකම් කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10

R.M.I. Rathnayake
Secretary
Ministry of Fisheries
2nd Floor, New Secretariat Building ,
Maligawatta, Colombo 10.

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை நிலை	
	2021	2020
	ரூபா	ரூபா
